ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1894/22 - 2014 දෙසැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2014.12.26

1894/22 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம்: KDS/UNU/4/6/LA/61/2011.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின்
குறிப்பிலக்கம்: 4/3/9/2011/WS/363.

பொது மக்களின் தேவைக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியிருப்பதால், காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவில், மெந்த பலாத கோரளையின் சிறு பிரிவில், நிகஹெடிய கிராமத்திலமைந்த, நில அளவை மாஅதிபரால் அளந்து, 2014.11.12 ஆம் திகதியிடப்பட்ட அளந்து தயாரிக்கப்பட்ட இல. மஹ 6381 ஐக் கொண்ட ஆரம்ப வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள "அத்தனெக்கெதர வத்த" என்னும் காணியில் சுமார் 0.0023 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு.

**துண்டு இல. 1**

**காணியின் பெயர்: அத்தனெக் கெதர வத்த; விஸ்தீரணம்: 0.0023 ஹெக்டயார்.**

வடக்கு: எச். எம். எல். கே. ஹேரத் உரிமைகோரும் அத்தனெக் கெதர வத்த மற்றும் படிக்கட்டுகள்; கிழக்கு: படிக்கட்டுகள் மற்றும் எச். எம். எல். கே. ஹேரத் உரிமைகோரும் அத்தனெக் கெதர வத்த; தெற்கு: எச். எம். எல். கே. ஹேரத் உரிமைகோரும் அத்தனெக் கெதர வத்த; மேற்கு: எச். எம். எல். கே. ஹேரத் உரிமைகோரும் அத்தனெக் கெதர வத்த.

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும்:

1. திரு. எச். எம். எல். கே. ஹேரத்,
   இல. 31/B/1,
   நிகஹெடிய,
   வட்டப்பொல.

மேற்குறிப்பிட்ட காணிக்கு உரிமைகோருபவரோ அல்லது வேறு தொடர்புகள் இருப்பதாக கூறும் சகலரும் தாமாகவோ அல்லது அவர்களின் கடிதம் மூலம் அதிகாரம் உள்ளவர்களாகவோ இருப்பின் 2015, பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு உடுநுவர பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னைச் சந்திக்க வேண்டும்.

மேலும், 2015, பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் அக்காணியையோ அல்லது அக்காணிக்கு தொடர்புடைய தத்தமது உரிமைகளின் தன்மைகளையும் அக்காணியை எடுத்துக் கொள்ளுதலுக்கான நட்டஈடு கோருவதற்குறிய காரணங்கள் பற்றிய விபரங்களையும் நட்டஈட்டுத் தெகை, அத்தொகையை கணக்கீடு செய்த முறையையும் கடிதமூலம் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்க வேண்டும். அவற்றை உரிமைகள் கோரல் பற்றிய ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

ஜி. கே. ஜி. ஏ. ஆர். பீ. கே. நந்தன,
பிரதேச செயலாளர்,
உடுநுவர.

பிரதேசச் செயலகம்,
உடுநுவர,
2014, திசெம்பர் 21.

01 - 331

## பிழை திருத்தம்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: பிசெப/இ/1/2/58.
காணி அமைச்சின் இல.: 03/J/82/1/142/ VE.

1986.02.12 ஆந் திகதிய 388/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பிரசுரிக்கப் பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

இருக்கும் பகுதி: சபரகமுவ மாவட்டத்தின், இரத்தினபுரி மாகாணத்தின், பலாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவின், ஹெலஉட பிரதேசத்தின் வதுகாரகொட கிராமத் தின் (பகுதி)

நோக்கத்தின் இல: அ. க. சி. 477 மேலதிக 14.

**துண்டு இல. 219**

காணியின் பெயர்: பலாங்கொடை மேல் தோட்டம், உடகந்த தோட்டம், கழுந்தய தோட்டம், கஜு கொடுவே தோட்டம்; உரிமை கோருபவர்கள்: 01. கந்தைய சிவசிதம் பரம், சுகந்தன், கோப்பாய். 02. செல்லம்மா ஞானசுந்தரம், செல்வகொட், பொதுவில். 03. மகேஸ்வரி அருலானந்தம், இல. 38, கொலின்வுட்ஸ் லேன், வெள்ளவத்தை. 04. ரேனுகா தேவி கணகசபை, இல. 11, ராமகிருஸ்ணா கார்டன், வெள்ளவத்தை, கொழும்பு; விஸ்தீரணம்: 2.428 ஹெக்டயார்.

மேலும் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு உரிமை, பங்கு, வேறு சம்பந்தம் கூறும் அனைவரும் தங்கள் எழுத்துமூலம் உரிமைகோருபவர்களும் 1986.04.21 திகதி காலை 10.00 மணிக்கு பலாங்கொடை உப செயலாளர் காரியாலயத்தில் என்னை சந்திக்க வேண்டும். என்பது 2015. 02.16 திகதி காலை 10.00 மணிக்கு பலாங்கொடை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னை சந்திக்க வேண்டும் என்று மாற்றப்படல் வேண்டும். 2015.02.16 திகதி காலை 10.00 மணிக்கு உரிமை கோருபவர்கள் தாங்களின் உரிமைகளை நிரூபித்தல் வேண்டும்.

மேலும், 1986. 04. 07 திகதிக்கு முன் என்கிறது 2015.02.02 திகதிக்கு முன் என்று மாற்றப்பட வேண்டு வதுடன் அன்றைய நாளுக்கு முன் அக் காணி சம்பந்தமான அவர்களுடைய உரிமையின் விபரத்தை, காணியை எடுப்பதினால் நஷ்டஈடு கேட்பதற்கான அவர்களுக்கு இருக்கும் காரணம் பற்றிய விபரம், நஷ்டஈட்டுத் தொகையும், அதற்கு கணக்கு பார்த்த விதத்தையும், இரண்டு பிரதிகளின் எழுத்துமூலம் தெரியப் படுத்தல் வேண்டும்.

சம்பிக நிரோஸ் தர்மபால,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை.

பிரதேசச் செயலகம்,
பலாங்கொடை,
2014, திசெம்பர் 23.

01 - 332

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. HP/De/2/L.A./88, KDS/HAR/4/2/1/34.
காணி அமைச்சின் குறிப்பு இல.: No.4/3/9/2012/WS/363.

கண்டி மற்றும் புறநகர நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 1 ஆம் கட்டத்தின் 111 ம் கட்டம் கீழ் மெதவல பிரவேச வீதி மற்றும் புதிய சேவை நீர்ப்பாசன நிலையத்தினை நிர் மாணிப்பதற்காக வேண்டியதான கீழ்க்காணும் காணியை/ ஆட்சி உரிமையை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப் பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக் கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ் பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், மெதசிய பத்துவ சிறு பிரிவில் உள்ள மெதவல கிராமத்தில் அமைந்துள்ள சிரேஷ்ட மாவட்ட நில அளவை மா அதிபரால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. ஆ. வ. மஹ / 6379 எனும் ஆரம்ப வரைபடத்தில் காணப்படுகின்றன. சுமார் 0.1017 ஹெக்ட யார் விஸ்தீரணம் கொண்ட மூன்று காணித்துண்டுகளின் எல்லைகள்.

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: நாகவல ஹேன; உரிமை கோருபவர்: பஸ்நாயக முதியன்சேலாகே கண்டார மெணிகே, இல. 221/ட, மெதவல ஆரம்ப பாடசாலை அருகில், மெதவல; விஸ்தீரணம்: 0.0046ஹெக்டயார்.

**2. துண்டு இல. 2**

காணியின் பெயர்: கல்வெடே ஹேன; உரிமை கோருபவர்: ஹேரத் முதியன்சேலாகே ஹீன்பண்டா, இல. 221/1, ஹேனெகம பல்கும்புர, ஹாரிஸ்பத்துவ; விஸ்தீரணம்: 0.0078ஹெக்டயார்.

3. துண்டு இல. 3

காணியின் பெயர்: கல்வெடே ஹேன; உரிமை கோருபவர்: ஹேரத் முதியன்சேலாகே சோமரத்னபண்டா, இல. 246, ஹேனெகம பல்கும்புர, மெதவல, ஹாரிஸ்பத்துவ; விஸ்தீரணம்: 0.0893 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை எடுத்துக்கொள்ளப் படவிருக்கும் அல்லது காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015.ஆம் ஆண்டு மாசி மாதம் 11 ஆந் தேதி மு.ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேசச் செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை உரிமையை எடுத்தற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத்தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு மாசி மாதம் 04 ஆந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

ஆர். எம். பீ. எஸ். பி. இரத்னாயக்க,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேசச் செயலகம்,
நுகவெல, ஹாரிஸ்பத்துவ,
2014, திசெம்பர் 22.

01 - 346

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.